Registered as a Newspaper   பக்கங்கள் 04   விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   மக்கள் தினசரி   Peoples Daily

நாதம் 04   திருவள்ளுவர் ஆண்டு 2024   கார்த்திகை 29   (14-12-93 )   செவ்வாய்க்கிழமை   ஓசை 299

## "பாறலஜின்" ஊசி மருந்து பாவனைக்கு தடை விதிப்பு

கடுமையான காய்ச்சலுக்குப் பாவிக்கப்படும் 'பாறலஜின்' ஊசி மருந்து பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் ஒன்று 1993 ஆகஸ்ட் 19, விசேட அரச வர்த்தமானியில் வெளியாகியுள்ளது. மேலும் வாண்சஸ் மார்க்கட்டிங் சேர்விஸ் தயாரிப்பான நியூமோசின், வின்ரேர்ப் வென்டோல் லங்கா தயாரிப்பான வின்ரோஜினோ, பிறிஸியள்ட் மார்க்கட்டிங்சேவிஸ் நியூமோரிசன்மற்றும் நியுமத்சீன் ஆகிய மருந்து வகைகள் உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அங்கீகாரம் பெறாத போலித் தயாரிப்புகள் எனக் கொழும்பு சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (4ஆம் பக்கம் பார்க்க)

- கடலிலும், தரையிலும் பயன்படும் டாங்கிகள்
- கனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட ஹெலிகள்

# போர் முனைக்கு நவீன ஆயுதம்

# கொள்வனவு பற்றி பரிசீலிப்பு

## தாக்குதல்களுக்கு அவசியமாம்

எதிர்கால இராணுவ நடவடிக்கைக்கென கடும் தாக்குதல்களை நடத்தக் கூடிய உலங்குவானூர்திகளையும் மற்றும் கடல், தரைமார்க்கமாகத் தாக்குதல்கள் நடத்தக் கூடிய யுத்த டாங்கிகளையும் கொள்வனவு செய்வது தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிகளால் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

பூநகரி கூட்டுப்படைமுகாம் மீது விடுதலைப் புலிகளினால் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டபோது படையினரை அங்கு மேலதிகமாக அனுப்புவதற்கு எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டதைத் தொடர்ந்தே தரையிலும் - கடலிலும் செயற்படக்கூடிய நவீன டாங்கிகளைக் கொள்வனவு செய்வது குறித்து தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாகத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

மேலும், கனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட தரையிலிருந்து வரும் எதிர்ப்புக்களைச் சமாளிக்க கூடியதுமான உலங்குவானூர்திகள் கொள்வனவு செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை விமானப்படை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் தெரியவருகின்றது. தற்பொழுது பாவனையில் உள்ள பெல்ரக 212, 312 ரக உலங்குவானூர்திகளின் செயற்பாடு பூநகரித் தளம் மீதான தாக்குதல்களின் போது திறம்படச் செயற்பட முடியாமல் போனதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

எனவே விடுதலைப் புலிகளிடம் இருந்து முகாம்களைப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் 3 ராணுவ முகாம்கள் முற்றாக மூடப்பட்டன

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தால் 1991ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட உப்பூறல் முகாமைமூடிவிட்டு படையினர்பின்வாங்கி உள்ளனர்.

மேற்படி பகுதியில் இரண்டு வருடகாலமாக நிலைகொண்டிருந்த படையினர் அம்முகாமை கடந்த மாதம் 21 ஆம் திகதி மூடிவிட்டு அங்கிருந்து வெளியேறி இலங்கை துறை முகத்துவாரத்திற்கு சென்றனர். பின்பு இம் முகாமையும் கடந்த 8ஆம் திகதி மூடிவிட்டு படையினர் முற்றாக வெளியேறி விட்டனர். தற்போது உப்பூறல், இலங்கை துறை முகத்துவாரத்திலும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 9717 ராணுவத்தினர் தப்பிஓடினர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் நடைபெற்றுவரும் யுத்தத்தின் பின்னர் 9717பேர் இராணுவத்திலிருந்து தப்பி ஓடியுள்ளனர் இவர்களில் 366பேர் இராணுவ உத்தியோகத்தர் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## மூன்றாம் நாள் வெற்றி விழாவிற்கு வடமராட்சி விழாக்கோலம்

### பருத்தித்துறையில் பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

பூநகரி இராணுவ, கடற்படைக் கூட்டுப்படைத் தளத்தை விடுதலைப் புலிகள் தகர்த்தெறிந்து வெற்றி கொண்டதையிட்டு நடைபெற்ற வெற்றிவிழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று வடமராட்சியில் மிகவும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன.

இவ் வெற்றிவிழாவையொட்டி வடமராட்சியெங்கும் எழுச்சிக்கோலம் பூண்டு காணப்பட்டது. வல்லை வெளியில் பூநகரி கூட்டுப் படைத்தளத்தை தத்துருபமாகச் சித்தரிக்கும் படைத் தள மாதிரி அமைப்பு ஒருபுறம், வல்லைப் பாலத்தின் நீர்த்தேக்கத்தில் கடற்புலிகளின் விசைப்படகுகளின் சாகச காட்சிகள் மறுபுறம் வடமராட்சியின் கேந்திரப் பகுதிகளுடாக பவனிவரும் வெற்றிவிழா ஊர்திகளும் வடமராட்சிப் பிரதேசத்தை விழாக்கோலமாக்கும் மின் அலங்காரங்கள், வீதிவளைவுகள், சிவப்புவர்ண அலங்காரங்கள் மற்றொருபுறம் இத்தனையும் இணைத்து நேற்றைய வெற்றிவிழாவின் இறுதிநாள் கொண்டாட்டங்களுக்கு மெருகூட்டுவதாக அமைந்தது.

இவ்விழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண் (4 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழர் போராட்டத்திற்கு எதிராக

## இந்திய அரசின் உதவிபெற சிறிலங்கா அரசு பரிசீலனை

### சிரேஷ்ட அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் அளவில் வடக்கு-கிழக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை புலிகளுக்கு எதிராக நடத்துவதற்கு அர

யில் ஒருமித்த கருத்து உருவாகாத வரை வடக்கு-கிழக்கில் படையினர் பாரிய நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்

அதிகாரிகள் மத்தியில் ஒருமித்தகருத்தும், அணுகுமுறையும் இல்லாததாலேயே அண்மைக்கால நடவடிக்கைகள்

## குழந்தையாய் தவழ்ந்த கடற்புலிகள் இன்று ஒருபடையாய் வளர்ந்துள்ளனர்!

(யாழ்ப்பாணம்)

வெற்றிவிழாவில் கடற்புலிகளின் விசேட தளபதி சூசை

நடத்தக் கூடிய யுத்த டாங்கிகளையும் கொள்வனவு செய்வது தொடர்பாக பாது காப்பு அதிகாரிகளால் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

பூநகரி கூட்டுப்படைமுகாம் மீது விடுதலைப் புலிகளினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது படையினரை அங்கு மேலதிகமாக அனுப்புவதற்கு எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டதைத் தொடர்ந்தே தரையிலும் - கடலிலும் செயற்படக்கூடிய நவீன டாங்கிகளைக் கொள்வனவு செய்வது குறித்து தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாகத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

மேலும், கனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட தரையிலிருந்து வரும் எதிர்ப்புக்களைச் சமாளிக்க கூடியதுமான உலங்குவானூர்திகள் கொள்வனவு செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை விமானப்படை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் தெரியவருகின்றது. தற்பொழுது பாவனையில் உள்ள பெல்ரக 212, 312 ரக உலங்குவானூர்திகளின் செயற்பாடு பூநகரித் தளம் மீதான தாக்குதல்களின் போது திறம்படச் செயற்பட முடியாமல் போனதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

எனவே விடுதலைப் புலிகளிடம் இருந்து முகாம்களைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

பூநகரி இராணுவ, கடற்படைக் கூட்டுப்படைத் தளத்தை விடுதலைப் புலிகள் தகர்த்தெறிந்து வெற்றி கொண்டதையிட்டு நடைபெற்ற வெற்றிவிழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று வடமராட்சியில் மிகவும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன.

இவ் வெற்றிவிழாவையொட்டி வடமராட்சியெங்கும் எழுச்சிக்கோலம் பூண்டு காணப்பட்டது. வல்லை வெளியில் பூநகரி கூட்டுப் படைத்தளத்தை தத்துருபமாகச் சித்தரிக்கும் படைத்தள மாதிரி அமைப்பு ஒருபுறம், வல்லைப் பாலத்தின் நீர்த்தேக்கத்தில் கடற்புலிகளின் விசைப்படகுகளின் சாகச காட்சிகள் மறுபுறம் வடமராட்சியின் கேந்திரப் பகுதிகளூடாக பவனிவரும் வெற்றிவிழா ஊர்திகளும் வடமராட்சிப் பிரதேசத்தை விழாக்கோலமாக்கும் மின் அலங்காரங்கள், வீதிவளைவுகள், சிவப்புவர்ண அலங்காரங்கள் மற்றொருபுறம் இத்தனையும் இணைத்து நேற்றைய வெற்றிவிழாவின் இறுதிநாள் கொண்டாட்டங்களுக்கு மெருகூட்டுவதாக அமைந்தது.

இவ்விழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழர் போராட்டத்திற்கு எதிராக

# இந்திய அரசின் உதவிபெற சிறிலங்கா அரசு பரிசீலனை

## சிரேஷ்ட அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் அளவில் வடக்கு-கிழக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை புலிகளுக்கு எதிராக நடத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இந்த இராணுவ நடவடிக்கைக்கு இந்தியாவின் உதவியைப் பெற அரசாங்கம் தீவிரமாக பரிசீலித்து வருகின்றது என்று கிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்திருப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் மத்தியில் ஒருமித்த கருத்து உருவாகாத வரை வடக்கு-கிழக்கில் படையினர் பாரிய நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளப்போவதில்லை என்று நம்பகரமாக அறியவருகிறது என்று அப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

படையினரின் சமீபகால தோல்வி, பின்னடைவு குறித்து அரசாங்க உயர் மட்டம் ஆராய்ந்த பின்னரே இப்படியான ஆலோசனை எடுக்கப்பட்டதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினர், உயர் மட்ட அதிகாரிகள் மத்தியில் ஒருமித்தகருத்தும், அணுகுமுறையும் இல்லாததாலேயே அண்மைக்கால நடவடிக்கைகள் தோல்விஅடைந்ததெனமேற்படி சிரேஷ்ட அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் எழுந்துள்ள கருத்துப்பிணக்கால் வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்படும் தாக்குதல் நடவடிக்கைகள் வெற்றி பெறுவதில்லை என அந்த அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# குழந்தையாய் தவழ்ந்த கடற்புலிகள் இன்று ஒருபடையாய் வளர்ந்துள்ளனர்!

## வெற்றிவிழாவில் கடற்புலிகளின் விசேட தளபதி சூசை

(யாழ்ப்பாணம்)

''கடந்த ஆண்டு குழந்தை நிலையில் தவழ்ந்து கொண்டிருந்த கடற்புலிகள் இன்று எதிரிப்படைகளின் கூட்டுத்தளத்துக்குள் புகுந்து படைத்தளங்களை அழித்துவிட்டு அத்தளங்களில் இருந்து கடற்படைக் கப்பல்களையும், ஆயுதங்களையும் கைப்பற்றி அதனைக் கொண்டு ஒரு கடற்படையைக் கட்டி வளர்க்கக்கூடிய அளவுக்கு நாம்வளர்ந்துவிட்டோம். இவ்வளர்ச்சிக்கு காரணம் எமது மக்கள் தான்''. இவ்வாறு பருத்தித்துறை பழைய பஸ் நிலைய மைதானத்தில் நேற்றுமாலை நடைபெற்ற பூநகரி வெற்றி விழாப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய கடற்புலிகளின் விசேட தளபதி திரு. சூசை தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது;

''பூநகரி வெற்றிக்காக எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியிலும் எமது மக்கள் பாடுபட்டு பங்களிப்புச்செய்துள்ளனர். இத்தாக்குதலின்போது முதல் நாளில் எம்மால் கைப்பற்றப்பட்ட விசைப்படகுகளையும், ஆயுதங்களையும் எமதுமுகாம்களுக்குகொண்டு செல்வதற்கு சுமார் 500 இற்கும் மேற்பட்ட பொது

(3 ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலி, பூநகரி இராணுவ தோல்விக்கு பொறுப்பேற்றே பதவி விலகுகிறேன்

## இராணுவத் தளபதி சிசில் தெரிவிப்பு

(கொழும்பு)

கிளாலியில் சிறிலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட யாழ்தேவி இராணுவ நடவடிக்கை தோல்வி, பூநகரி முகாம் விடுதலைப்புலிகளால் தகர்க்கப்பட்டது ஆகியவற்றுக்கு தார்மீகப் பொறுப்பேற்றே தான் பதவி விலகுவதாக சிறிலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா தெரிவித்தார்.

பூநகரி தாக்குதலைத்தொடர்ந்து அதிகாரிகள் மத்தியில் பேசும்போது அவர்களை ஊக்குவிக்கவே தாம் முயற்சி செய்ததாகவும் ஆனால் துரதிர்ஷ்ட வசமாக தப்பெண்ணத்தை ஏற்படுத்தக் கூடிய செய்திகள் வெளிவந்து விட்டதாகவும் தெரிவித்த அவர்.

சமீப காலமாகவே தீய நோக்கத்துடன் இராணுவத்தினரின் மனோபலத்தைச் சிதைக்கக் கூடிய செய்திகள் வெளிவந்து கொண்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# முழு அளவினதான யுத்தத்திற்கு மக்கள் தயாராக வேண்டும்

## வெற்றி விழாவில் கரிகாலன்

(வடமராட்சி)

சிங்கள அரசும் இராணுவமும் இன்று மிகப் பெரும் தாக்குதல் ஒன்றை குடாநாட்டிற்குள்ளேயே நடத்த திட்டமிட்டு வருகின்றனர். இந் நிலையில் அனைவரும் புலிகளின் கரங்களைப் பலப்படுத்தி, ஒரு முழு அளவிலான யுத்தத்திற்கு தயாராக வேண்டும் என அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் நேற்று பருத்தித்துறையில் நடைபெற்ற பூநகரி வெற்றிவிழா கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர்அங்குஉரையாற்றுகையில்; சிங்கள அரசும் இராணுமும் இன்று இங்கே மிகப் பெரும் தாக்குதல் ஒன்றை நடாத்த திட்டமிட்டுவருகின்றனர். இந்த குடாநாட்டிற்குள்ளே ஒரு மிகப்பெரும் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளப்படுவதாகஇருந்தால்நிச்சயமாகபல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொல்லப்படுவார்கள் இளம் பெண்கள் பாலியல்வன்முறைக்குட்படுத்தப் படுவார்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

# மூன்றாவது சகாப்தத்தை அடைந்துவிட்ட தமிழீழப் போராட்டம்

## மன்னார் மாவட்ட தளபதி கதிர்

'தமிழீழ விடுதலைப் போராட்டமானது மூன்றாவது சகாப்தத்தை அடைந்துவிட்ட இன்றைய நிலையிலே விடுதலைப்புலிகளாகிய நாமும் மக்களாகிய நீங்களும் இணைந்து பல வெற்றிகளை எமதாக்கிக்கொண்டுள்ளோம். மண்கிண்டிமலை தகர்ப்பு யாழ்தேவி நடவடிக்கை என்பன இராணுவகட்டமைப்பில் ஆட்டத்தைக் கொடுத்தனஇதன்பின் இவற்றை எல்லாம் மிஞ்சி பூநகரிப் படைமுகாம்மீதான எமது தவளை நடவடிக்கை இராணுவத்தளபதியையே மாற்றி உள்ளது'' என மன்னார் மாவட்டதளபதி கதிர் நேற்று பருத்தித்துறையில் நடைபெற்ற வெற்றிநாள் கூட்டத்தில் தெரிவித்தார்.

''அவர்மேலும் கூறுகையில் சிலாவத்துறை போன்ற பலமான படைமுகாம்களை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஜெரிசில்வா நியமனத்திற்கு சிசில் வைத்தியரட்னா கண்டனம்

(கொழும்பு)

புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா பதவி உயர்த்தப்படுவதற்கு தற்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ன அரசு மீதுகண்டனம் வெளியிட்டுள்ளார். நேற்றைய ஐலண்ட் பத்திரிகையில் அவர் எழுதிய முதல்பக்க கட்டுரை ஒன்றிலேயே இக் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இராணுவத்திற்குஏற்பட்ட மிக மோசமான தோல்விக்கு தாமே பொறுப்பு என்பதை சிசில் வைத்தியரெட்ன அக்கட்டுரையில் ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால்களத்தில்உள்ள தளபதிகள் தனது கட்டளைகளை நிறைவேற்றவில்லை கட்டளைப்படி நடக்கவில்லை என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரியில் புதியஇராணுவ தளபதியாக பதவி ஏற்பார் என எதிர்பார்க்கப்படும் ஜெரி டி சில்வா பதவி உயர்த்தப்பட்டதற்கும் சிசில் வைத்தியரெட்ன தனது கட்டுரையில் அரசை சாடியுள்ளார். சிசில் வைத்தியரெட்னவின் இந்த எதிர்ப்பு இராணுவத் தளபதிகளினுள் ஏற்பட்டுவரும் உட்பூசல்களுக்கும் பொறாமைக்கும் எடுத்துக் காட்டு எனவும் பதவி விலகவுள்ள சிசில் வைத்தியரெட்ன அமைதியாக பதவியை விட்டு போகப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முன்எப்பொழுதும் இல்லாதவாறு கடலிலும், தரையிலும் போரிட்டோம்!

## கடற்புலிகள் மகளிர் படைத்தளபதி நளாயினி

(யாழ்ப்பாணம்)

''விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலகில் உள்ள எந்த ஒரு நாட்டிலும் இல்லாத அளவுக்கு எமது மகளிர் படையணி கடலிலும் தரையிலும் எதிரிப் படைகளின் கூட்டுத்தளங்கள் மீது பெரும் தாக்குதலை நடாத்தி வெற்றியும் கண்டுள்ளது.'' இவ்வாறு நேற்று மாலை பருத்தித்துறையில் நடைபெற்ற பூநகரித் தளம் தகர்ப்பு வெற்றி விழாப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கலண்டர் டயறி வகைகள்

லீலா கலண்டர், சகல விதமான டயறிவகைகள், கிறிஸ்மஸ் காட், அன்பளிப்பு அடிப்பதற்குரிய கலண்டர் மொத்தமாகவும் சில்லறையாகவும் மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம் (சி-8112)

### இந்தியா டுடே

இலங்கை ஏஜண்டான P. S சுந்தரம் அன் சன்ஸ் அவர்களால் தமிழீழத்தில் ஏஜண்டாக எம்மை நியமித்துள்ளார்கள். வாடிக்கையாளரின் நன்மை கருதி விலை குறைத்துள்ளோம். மக்மிலன் ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி 8111)

### பசன் பழம் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களை (Passion Fruit) நாம் கொள்வனவு செய்கின்றோம். TASTE LINE INDUSTRIES (PVT) LTD, 14, Seenier Lane Jaffna (சி-8096)

### வெற்றுப்போத்தல்கள் தேவை

வெற்றுப் போன்விட்டா, மாலமட், வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் மூடியுடனும், ஜம், புரோடினேக்ஸ், பியர், சோடியல் போத்தல்கள் மூடியில்லாமலும் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிடெட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-8054)

### துளிர்

தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர் அறிவியல் இதழ். கிடைக்கும் இடம் வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (6861)

### குப்பைகள் அகற்றப்படவில்லை

(குருநகர்)

சமீபத்தில் வீசிய சூறாவளியால் முறிந்து வீழ்ந்த மரங்களின் கழிவுப் பகுதிகள் வீதிகளின் மருங்கில் போடப்பட்டுள்ளதால் அவற்றில் இருந்து துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டு தொற்று நோய்கள்

# வதிவிட வேளாண்மை போட்டியில் ஒவ்வொரு குடும்பமும் பங்கேற்கட்டும்

### உதவி விவசாயப் பணிப்பாளர்

வதிவிட வேளாண்மையில் ஈடுபடுவது குடும்பத்திற்கு ஒரு ஆசீர்வாதமாகவும், சந்ததிக்கு ஒரு பரிசாகவும், உற்பத்தியாளர்களுக்கு இன்பம் பயப்பதாகவும் அமையும் என்று உதவி விவசாயப்பணிப்பாளர் சிவலோகநாதன் கூறியுள்ளார்.

அவர் இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் மேலும் தெரிவித்திருப்பதாவது

ஒவ்வொரு குடும்பமும் தமது வதிவிடத்தில் வீட்டுத் தோட்ட மரக்கறிச் செய்கையுடன் பழப்பயிர் மற்றும் விலங்கு வேளாண்மை, தேனீ வளர்ப்பு போன்றவற்றிலும் ஈடுபடுவது சிறப்பானதாகும்.

விவசாயத் திணைக்களமும், கமநல சேவைத்திணைக்களமும் கடந்த பல ஆண்டுகளாக வதிவிட வேளாண்மையை ஊக்குவித்த போதும் கடந்த இரண்டு வருடங்களாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வதிவிட வேளாண்மைக்காக போட்டி நடத்தி வருகின்றனர். இதில் இம்முறையும் பல்லாயிரக்கணக்கில் மக்கள் பங்கேற்க வேண்டுமெனவும் இதன் மூலம் பெறுமதி மிக்க பரிசுகளையும் பெறுவதுடன் உற்பத்தியை அதிகரிக்கும்படியும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### வாதுவ புறப்படும்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நின்று பொருள்களை இறக்கும் 'வாதுவ' கப்பல் நாளை புதன், வியாழக்கிழமைகளில் புறப்படுமென அறியமுடிகிறது. இக்கப்பலில் 46 பயணிகள் செல்லவுள்ளனர். (யோ)

## சமூக மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் மாவீரர் வாரத்தை முன்னிட்டு கோப்பாய் குடியேற்றத் திட்டப் பகுதியில் சமூக மேம்பாட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது இத்திட்டத்தின் கீழ் இருநூறு குடும்பங்களுக்கு இலவசமாக இரட்டை குட்டடுப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டதுடன், பயன்தரும் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.


### சித்த வைத்திய மருந்தக விற்பனை

## நிலைய திறப்பு விழா

15 12 93 புதன்கிழமை முற்பகல் 9 30 மணிக்கு திரு. தி. சபாரத்தினம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனம் பொருள்) அவர்களால் இல. 572, மருத்துவமனை வீதி யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் திறந்து வைக்கப்படும்.

பொதுமுகாமையாளர்

யாழ். பகுதி தெங்கு பனம்
பொருள் கூட்டுறவுச் சங்க
கொத்தணி,
இல. 75/1, பலாலி வீதி,
சந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (சி-8124)


## ச. ச. நிலைய நன்கொடைப்பணம் விரைவில் வழங்கப்படவுள்ளது

- சு. டிவகலாலா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லைப் பகுதிக்குள் இயங்கிவரும் சனசமூக நிலையங்களுக்கான இவ்வருட நன்கொடைப் பணமான ஆயிரத்தி இருநூறு ரூபாவும் வெகுவிரைவில் வழங்கப்பட இருப்பதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு. டிவகலாலா கூறியுள்ளார்.

யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர்கள் கலந்துகொண்ட கூட்டம் உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையில் இடம் பெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், சில சனசமூக நிலையங்களின் செயற்குழுக்களுக்கிடையே காணப்படும் முரண்பாடுகளால் அவை மக்களுக்கான சேவையை சரிவரச் செய்யாமல் இருப்பது நல்லதல்ல என்றும் குறிப்பிட்டார். (17)


## அறிவித்தல்

### வட இலங்கைச் சங்கீதசபைத் தேர்வுகள் - 1994

மேற்படி தேர்வுகளுக்கான விண்ணப்பப்படிவங்களும், அறிவுறுத்தல்களும் 1993-12-15 புதன்கிழமை தொடக்கம், சபைப்பணிமனையில் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தேர்வுநாடிகளுக்கு அறியத்தருகிறேன். விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை ரூபா 10/-

தி. பெரியதம்பி,
யாழ். மாவட்டக்கல்விப் பணிப்பாளரும்,
(யாழ்ப்பாணம் : 01)
(சி 8119) வட இலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.


### சமூகம் தரக் கோரிக்கை

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் கல்விக்கோட்டங்களைச் சேர்ந்த ஆண்டு 4, ஆண்டு 5இல் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் நாளை மறுதினம் வியாழனன்று காலை ஒன்பது மணிக்கு முறையே மருதனார்மடம் யூனியன் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் சமுகம் தருமாறு கோட்டப்பிரதிக்கல்விப் பணிப்பாளர் துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

மேலும் பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த முதன்மை ஆசிரியர்கள் அனைவரையும் நாளை புதன்கிழமை காலை ஒன்பது மணிக்கு கோட்டக்கல்விப் பணிமனைக்கு சமுகம் தருமாறும் அவர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

### புதியவர் நியமனம்

(கொழும்பு)

வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்தின் புதிய பொலிஸ் இன்ஸ்பெக்டராக எம். கெட்டி ஆராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையத்தின் பொலிசாருக்கும் சில முஸ்லிம் மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராற்றைத் தொடர்ந்து இந்த நிலையத்தில் இதுவரை கடமையாற்றிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் இடம் மாற்றப்பட்டுள்ளார்.

### திருட்டு

(வடமராட்சி)

புலோலி மேற்கில் வீதியால் சென்ற வயோதிபப்பெண்மணியிடம் சைக்கிளில்சென்ற இரண்டு வாலிபர்கள் அவரது கழுத்தில் இருந்த பெறுமதியான தங்கச் சங்கிலியை பட்டப்பகலில்அறுத்துச்சென்றுள்ளனர். (யோ)


### BECON

யாழ்ப்பாணம்


## 16-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



அமரர்

### திரு. நடேசு நடராஜமணி

(அதிபர், கீரிமலை நகுலேஸ்வர ம. வி.)

எம் உயிரிற்கும் மேலான அன்புத் தந்தையே நாட்கள் பதினாறு உருண்டோடி விட்டன. 43 வருடங்கள் வாழ்ந்தீர்கள். ஆனால் 43 வருடம் சென்றாலும் உங்கள் பிரிந்துயரில் இருந்து எங்களால் விடுபட முடியாமல் தவிக்கின்றோம்.

எம் அருமைத் தந்தையே தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

14-12-1993 செவ்வாய் (இன்று) எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்தில் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மில் லேன்,
மல்லாகம்.

-குடும்பத்தினர்

(6820)

## நீங்காத நினைவுடன் முதலாம் ஆண்டு நினைவு



மலர்வு

16-02-1971

வீரச்சாவு

25-11-1992

லெப். மதி

## துளிர்

தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர் அறிவியல் இதழ். கிடைக்கும் இடம் வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (6861)

## குப்பைகள் அகற்றப்படவில்லை

(குருநகர்)

சமீபத்தில் வீசிய சூறாவளியால் முறிந்து வீழ்ந்த மரங்களின் கழிவுப் பகுதிகள் வீதிகளின் மருங்கில் போடப்பட்டுள்ளதால் அவற்றில் இருந்து துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டு தொற்று நோய்கள் பரவும் அபாயமும், வீதிப் போக்குவரவில் இடையூறுகளும் ஏற்பட்டு வருகின்றன.

குருநகர்ப் பகுதியில் வீதிகளில் போடப்பட்டுள்ள கழிவுப் பொருள்கள் பலநாட்களாகத் தேங்கிக் கிடக்கின்றன. இவற்றை அகற்றுவதற்கான மாநகர குப்பைவண்டிகள் இப்பகுதியில் சேவையாற்றிப் பல மாதங்களாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21)

## ஓடு உடைந்து விழுந்து மரணமானார்

(யாழ்ப்பாணம்)

புறாப்பிடிப்பதற்காக வீட்டிற்கு மேல் ஏறிய சிறுவன் ஓடு உடைந்து கீழே விழுந்து மரணமானார்.

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து யாழ் ஐந்துசந்திப் பகுதியில் வசித்துவரும் தனநாயகம் சுரேஷ் என்பவரே மரணமானவராவார்.

இவர் கடந்த புதனன்று புறாப்பிடிப்பதற்காக தமது வீட்டிற்குமேல் ஏறியபோது ஓடு உடைந்து கீழே விழுந்ததினால் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு உடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மரணமானார். (88)

## மணல்வெளிப் பகுதியில் மரக்கன்று நடுகை

(யாழ்ப்பாணம்)

தரிசாகக் கிடக்கும் மணற்காட்டு மணல்வெளிப் பகுதியினை சோலைவனமாக மாற்றுவதன் மூலம், மண்ணரிப்பை தடுக்கும் நோக்குடன் தென்னம்பிள்ளைகள், மரமுந்திரிகை, சவுக்கு மற்றும் பேரீச்சம் கன்றுகள் என்பவற்றை நடுகை செய்வதற்கும், பராமரிப்பதற்கும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பகுதி முனைப்புடன் முயற்சி எடுத்துள்ளது.


## அறிவித்தல்

### வட இலங்கைச் சங்கீதசபைத் தேர்வுகள் - 1994

மேற்படி தேர்வுகளுக்கான விண்ணப்பப்படிவங்களும், அறிவுறுத்தல்களும் 1993-12-15 புதன்கிழமை தொடக்கம், சபைப்பணிமனையில் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தேர்வுநாடிகளுக்கு அறியத்தருகிறேன். விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை ரூபா 10/-

தி. பெரியதம்பி,
யாழ். மாவட்டக்கல்விப் பணிப்பாளரும்,
(யாழ்ப்பாணம் : 01)
(சி 8119) வடஇலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.

**BECON**

யாழ்ப்பாணம்

A/L 94 DAY CLASSES

கலை, வர்த்தகம்
புதிய பிரிவு

பொருளியல்:- S. வரதராஜன்
வர்த்தகம்:- பசில்
கணக்கியல்:- சௌந்தி

ஆரம்பம்: 14-12-93 செவ் 8.00 A.M

- நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
- முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும். (சி-8089)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 93-ல் பரீட்சை எடுத்த மாணவருக்கான

DAY CLASS

இன்று ஆரம்பம்

பொருளியல்: கூ. கலாகரன்
கணக்கியல்: S K பிரபாகரன்
வர்த்தகம்: தி. வரதன்
அளவையியல்: A. பிரபாகரன்
இந்துநாகரிகம்: பிரபல ஆசிரியர்

ஏனைய பாடங்களும் நடைபெறும்.

குறிப்பு: (1) Day Classக்கான சகல பாடங்களும் தூர இட மாணவர்களின் நலன்கருதி திங், செவ், வியாழன், வெள்ளி நான்கு நாட்களில் நடைபெறும்.
(2) வாரத்தில் ஒவ்வொரு பாடமும் 6 மணித்தியாலங்களுக்கு குறையாமல் நடைபெறும்.
(3) அனுமதிகளுக்கு முன்கூட்டியே தொடர்பு செய்க.

(சி-8121)


தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் கல்விக்கோட்டங்களைச் சேர்ந்த ஆண்டு 4, ஆண்டு 5இல் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் நாளை மறுதினம் வியாழனன்று காலை ஒன்பது மணிக்கு முறையே மருதனார்மடம் யூனியன் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் சமுகம் தருமாறு கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

மேலும் பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த முதன்மை ஆசிரியர்கள் அனைவரையும் நாளை புதன்கிழமை காலை ஒன்பது மணிக்கு கோட்டக்கல்விப் பணிமனைக்கு சமுகம் தருமாறும் அவர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

லிஸ் நிலையத்தின் புதிய பொலிஸ் இன்ஸ்பெக்டராக எம். கெட்டி ஆராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையத்தின் பொலிசாருக்கும் சில முஸ்லிம் மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராற்றைத் தொடர்ந்து இந்த நிலையத்தில் இதுவரை கடமையாற்றிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் இடம் மாற்றப்பட்டுள்ளார்.

## திருட்டு

(வடமராட்சி)

புலோலி மேற்கில் வீதியால் சென்ற வயோதிபப்பெண்மணியிடம் சைக்கிளில்சென்ற இரண்டு வாலிபர்கள் அவரது கழுத்தில் இருந்த பெறுமதியான தங்கச் சங்கிலியை பட்டப்பகலில்அறுத்துச்சென்றுள்ளனர். (யோ)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
1902.04.10



மறைவு
1993.11.14

### வேலாயுதர் கந்தையா

(ஆச்சாரியார்)

பத்திர காளி கோயிற் பக்கலில் உறைந்தே யந்நாள்
பாரிய வொப்பந் தங்கள் செய்துயர்ந் தோங்கி நின்ற
சித்திரத் திறனமைந்த வில்லங்கள் ஆலயங்கள்
சிறப்புற வமைத்த சீரோன் சிரித்த நன் முகத்து நல்லோன்
உத்தம குணங்கள் வாய்ந்திங் குயர்ந்துபேர் பெற்று நின்றோன்
ஊர் உறவெங்கும் சுற்றி உறவு நட்பையும் வளர்த்தோன்
எத்தகை நலிவுற்றோர்க்கும் இனியவை பகர்ந்தும் செய்தும்
இருந்திறை பதம் அடைந்த இனிய கந்தைய வேளே!

அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வு இன்று 14. 12. 93இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சு. ராஜகோபால் குடும்பத்தினர்.
(மருமகன்)
பத்திரகாளி கோயிலடி,
சுழிபுரம்.
(6885)

## முதலாம் ஆண்டு நினைவு



மலர்வு
16-02-1971

வீரச்சாவு
25-11-1992

### லெப். மதி
### (பாலசிங்கம் சத்தியசீலன்)

வன்னி மண்ணில் உதித்திட்ட சீலனே
மதியாகி மக்களின் மனங்களில் நிறைந்தவனே
உமைப் பிரிந்து, ஓராண்டு சென்றதடா
ஓராண்டு அல்ல ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் மறந்திடுமா எம் நெஞ்சம்
மாவீரர் நன்னாளில் மாவீரர் வரிசையிலே
தம்பி பின் அண்ணனுமாய் இடம் பிடித்தீர்களே
எப்பிறப்பில் இனி உங்கள் முகம்
எப்போ காண்பது என்று ஏங்குகின்றோம்.

14 12.93 இன்று எல்லாளன் சனசமூக நிலையத்திற்கு அருகிலுள்ள லெப் மதியின் சகோதரியின் இல்லத்தில் நடைபெறும். 1-ம் ஆண்டு நினைவில் சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் வாடும்
லெப். மதி குடும்பத்தினர்.
நவக்கிரி,
புத்தூர்.
(6851)

## நினைவு கூருகின்றோம்...

**1993-12-14**

1988ஆம் ஆண்டு இதேதினத்தில் மயிலிட்டிப் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1989ஆம் ஆண்டு நிந்தாவூர்ப்பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**யூசுப்** (பிரான்சிஸ் குரோசப்-அம்பாறை)

1990ஆம் ஆண்டு பலாலிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து மருத்துவமனையில் சிகிச்சையின்போது வீரச்சாவெய்திய,

**நிதி** (சசிகலா இரத்தினசிங்கம்-கனகபுரம் - கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**விஜி** (சுப்பிரமணியம் விசுவநாத்-திருவையாறு-கிளிநொச்சி)

திருமலை-தோப்பூர் பகுதியிலுள்ள முஸ்லீம் ஊர் காவற்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட, உப்பூறல்பகுதியைச் சேர்ந்த 2 தமிழ்ப்பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**
(சி-8118)

நல்லூர் இளை நூலகம்
மன்றம்
யாழ்ப்பாணம்



### சிந்தனைக்கு

நேற்று அசாத்தியமாக இருந்தது இன்று சாத்தியமாகும் அற்புதத்தை தினசரி கண்டு வருகின்றோம்.

- மகாத்மாகாந்தி

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 14-12-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ எண் - 05

## ஒருபடி மாற்றம்?

தமிழ் தேசிய இனப்பிரச்சினை குறித்து தென்னிலங்கை அரசியலில் ஒருபடி நிலை மாற்றம் அண்மையில் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இதுவரை இனப்பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினை என்ற ரீதியில், ஒட்டுமொத்தமாகப் பேசிவந்த சிங்கள அரசியல் கட்சிகளில் சில, - குறிப்பாக முக்கிய எதிர்க் கட்சிகள் - இப்பிரச்சினை ஓர் அரசியல் பிரச்சினை எனத் தற்பொழுது கூறத் தொடங்கியுள்ளன.

இக்கட்சிகளின் இம்மாற்றங்கள் எந்த நோக்கில், எதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாகக் கூறமுடியாது விட்டாலும், ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் நிலைப்பாட்டிற்கு எதிரானது என்பதிலும், தேசிய இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டில் எதிர்க்கட்சிகள் சற்று வித்தியாசமான முடிவு எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை.

இந்த வகையில் பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டார நாயக்காவே வடக்கு - கிழக்கில் இடம் பெற்றுவருவது பயங்கரவாதப் பிரச்சினையல்ல இனப்பிரச்சினை என்றும், அதற்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும் என வற்புறுத்தத் தொடங்கினார்.

சிறிமாவோ பண்டார நாயக்கா இவ்வாறானதொரு நிலைப்பாட்டை எடுத்திருப்பினும், விரைவானதீர்விற்கான வழிவகையை இதுவரை கூறவில்லை. அதாவது இனப்பிரச்சினைதான் என்றாலும், அதற்கு அரசியல் ரீதியான தீர்வு எதற்கும் அவர் வழிவகை கூறவில்லை. அத்தோடு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களும் சிறிமாவோவின் இக்கோரிக்கையை முழுமையாக ஆதரிக்கின்றார்களா என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், சுதந்திரக்கட்சியினர் பலர் இன்னமும் இராணுவத் தீர்வு பற்றியே பேசுகின்றனர்.

இந்தவகையில் சிறிமாவோவின் நிலைப்பாட்டின் நம்பிக்கைத் தன்மை சந்தேகத்திற்குரியதாகியதே. இருப்பினும், பேச்சளவில்தானும் வடக்கு - கிழக்குப் பிரச்சினை ஒரு தேசிய இனப்பிரச்சினை என்ற நிலைப்பாட்டை சுதந்திரக் கட்சி எடுக்கமுனைவது ஒருபடி நிலை மாற்றம் என்பதில் சந்தேகமில்லை.

சிறிமாவோவின் இந்நிலைப்பாட்டை ஒத்ததாகவே அடுத்த பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசாநாயக்கா

# தேசிய இனப்பிரச்சினைக்கு தளம்பிய அரசாங்கம் தீர்வு தராது

- காமினி திசாநாயக்கா

(கொழும்பு)

சிக்கலான தேசிய இனப்பிரச்சினைக்கு தளம்பிய அரசாங்கத்தின் மூலம் தீர்வு எதையும் காணமுடியாது என்பதையே பூநகரிச் சம்பவம் தெளிவாகப் புகட்டியுள்ளது. இவ்வாறு முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவருமான காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக இருந்த இந்திய-இலங்கை ஒப்பந்தம் இந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மறைந்த பிரேமதாசாவினால் கிழித்தெறியப்பட்டது. அந்த நிலையே இதற்கு ஒரு காரணமாக அமைந்தது என்றும், இதை விட அரசாங்க இராணுவத்தின் பெறுமதிமிக்க உயிர்களான டென்சில் கொப்பேகடுவ, விஜய விமலரட்ணா, ரஞ்சன் விஜயரட்ணா, லலித்அத்துலத்முதலிஆகியோரின் உயிர்கள் அநியாயமான முறையில் அழிக்கப்பட்டதால் தான் இன்று சிறிலங்காவில் இளைஞர்கள் இப்படி வகைதொகையின்றிக் கொல்லப்படுவதற்குக் காரணமாக அமைந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பத்து ஆண்டுகளாக நீடிக்கும் இந்த யுத்தத்தை மூன்று மாதங்களில் இல்லாமல் செய்யமுடியுமா? என்பதேஇன்றையபிரச்சினையாகும். இவ்வாறான நிலை தோன்றுமாயின் அது பல உயிர்களின் அழிவுகளுக்கே வழிகோலும். எதிர்காலத்தில் இவ்வாறு குறுகியகாலத் திட்டத்தையும், நோக்கத்தையும் கொண்டு செயற்பட்டால் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களின் உயிர்கள் தான் பலியாகும்.

பூநகரி சம்பவம் அரசாங்கத்திற்கு ஒரு தெளிவான பாடம் புகட்டியுள்ளது சிக்கலான இத்தேசிய இனப்பிரச்சினைக்கு தளம்பிய அரசாங்கத்தின் மூலம் தீர்வு ஏற்படப் போவதுஇல்லை.

இந்த நேரத்தில் ஆட்சியாளர்களின் நடவடிக்கை தொடர்பாக நாட்டின் சகலரும் கூர்ந்து கவனித்து வருகின்றனர் இனப்பிரச்சினைக்கு புத்திக்கூர்மையான தீர்வு காண்பதே நாட்டிற்கு நன்மையானதாகும் இந்த நாட்டில் பலியான இராணுவத்தின் உயிர்களுக்கான பொறுப்பை அரசு ஏற்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

### மதகு உடைவுகளால் விபத்துகள் அதிகரிப்பு

(குருநகர்)

குருநகர் மவுண்கார்மேல் வீதி, யாழ். மடம் வீதிகளிலுள்ள மதகுகள் உடைந்துள்ளதனால் இரவுநேர விபத்துக்கள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதிகளுக்குக் குறுக்கே செல்லும் வடிகால்களை மூடியுள்ள 'கொங்கிறீற்' கற்கள் உடைந்தும், விலகிப் போயிருப்பதன் காரணமாக அவ் வீதிகளை இரவில் பயன்படுத்துவோர் மதகுள் வீழ்ந்து படுகாயமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (24)

### பணிப்பெண் பயிற்சி

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளிநாட்டுவேலைவாய்ப்பு பெற்று செல்வோருக்கு பயிற்சிகளை வழங்க சிறிலங்கா அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இங்கிருந்து வருடாந்தம் ஒரு லட்சத்து இருபத்தையாயிரம்பேர் மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புக்கு செல்வதாகவும் இவர்களில் பெரும்பாலானோர் வீட்டுப் பணிப்பெண்களாக இருப்பதால் இவர்களுக்கான பயிற்சி நிலையங்களை மாவட்டங்கள் தோறும் ஆரம்பிக்க இருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலம் 30 மில்லியன் ரூபாவை அரசு வருமானமாக பெற்றுள்ளது எனவும் இது அடுத்தவருடம் 40 மில்லியனாக அதிகரிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## 1994ஆம் ஆண்டிற்கான வர்த்தக விடுமுறை தினங்கள்

1994ஆம் ஆண்டிற்கு பின்வரும் வர்த்தக விடுமுறை தினங்கள் வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாஜத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன

14-01-94 — தைப்பொங்கல்
16-01-94 — தளபதி கேணல் கிட்டுவின் நினைவு தினம்
08-03-94 — அனைத்துலக மகளிர் தினம்
11-03-94 — மகா சிவராத்திரி மறு நாள்
01-04-94 — பெரியவெள்ளி
14-04-94 — சித்திரை வருடப்பிறப்பு
19-04-94 — அன்னை பூபதி அம்மாள் நினைவு தினம்
25-04-94 — சித்திரா பௌர்ணமி தினம்
01-05-94 — மேதினம்
05-06-94 — சிவகுமாரன் நினைவு தினம்
05-07-94 — கரும்புலிகள் தினம்
25-07-94 — இதயபூமி வெற்றிநாள் நினைவு தினம்
07-08-94 — ஆடி அமாவாசை தினம்
04-09-94 — நல்லூர் தேர்
(அந்தந்த பிரதேச கோவில் தேர்)
26-09-94 — தியாகி லெப்.கேணல் திலீபன் நினைவுதினம்
05-10 94 — குமரப்பா, புலேந்திரன் நினைவு தினம்
10-10-94 — லெப். மாலதி நினைவு தினம்
(முதல் பெண் போராளி)
02-11-94 — தீபாவளித் திருநாள்
13-11-94 — பூநகரி கூட்டுப்படைத்தளம் தகர்ப்பு வெற்றிநாள்
27-11-94 — மாவீரர் தினம்
25-12-94 — நத்தார் பண்டிகை தினம்

## போதைப் பொருள் குற்றவாளிகள் நாடுகடத்துமாறு கோரப்படும்

(கொழும்பு)

போதைப்பொருள் குற்றவாளிகளை கைது செய்து இலங்கைக்கு திருப்பியனுப்புமாறு சிறிலங்கா அரசு முதற் தடவையாக இந்தியாவையும் பாகிஸ்தானையும் கோரவுள்ளது போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக சார்க் நாடுகளினால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் இவ் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

போதைப்பொருள் குற்றத்திற்கான தண்டனை விதிக்கப்பட்ட அமீன் என்பவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தசமயம் சென்னைக்கு தப்பிச் சென்றுவிட்டதாகவும் இதேபோன்று மற்றும் மூவர் பாகிஸ்தானுக்கு தப்பிவிட்டதாகவும்தெரிவிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய உதவுமாறு இலங்கை அரசு இந்தியாவையும், பாகிஸ்தானையும் கோரவுள்ளது

### சைக்கிள்கள் விநியோகம்

(வடமராட்சி)

கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சங்க அங்கத்தவர்களுக்கு இதுவரை 500 சைக்கிள்களை வழங்கியுள்ளது. மேலும் 250 சைக்கிள்களை வழங்க இச்சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. (யோ)

## அடுத்த ஆண்டில் பலமுறை நிலநடுக்கம் நிகழலாம்

(கொழும்பு)

அடுத்த ஆண்டில் பலமுறை நிலநடுக்கம் ஏற்படும் எனவும் இதனால் பெரும் சேதங்கள் ஏற்படும் எனவும் ஆருடக் கணக்கின்படி அறிவிக்கப்பட்டுள்ளது

தமிழகத்தில் பல இடங்களில் பூமி நடுக்கம் ஏற்பட்டுள்ளது. திருவனந்தபுரம் பகுதியிலிருந்து 200மைல் தூரத்தில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட அதிர்ச்சியே இந்த பூமி அதிர்ச்சிக்கு காரணமென தமிழக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

### குழந்தையாய்

மக்கள் வான்தாக்குதலுக்கு மத்தியிலும் தமது உயிரையும் துச்சமென மதித்து எமக்கு உதவினர்

எமதுவளர்ச்சிக்காகப் பாடுபட்டு உயிரையும் துச்சமென மதித்து பூநகரிக் களநிகழ்வில் பங்கெடுத்துக்கொண்ட அனைவருக்கும் கடற்புலிகளின் சார்பில் எனது நன்றி

### நாடு திரும்ப பணிப்பு

அல்ஜிரியாவிலுள்ள அமெரிக்க நாட்டவர்களை உடனடியாக நாடு திரும்புமாறு அமெரிக்கா அவசர உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது. அல்ஜீரியாவில் அங்குள்ள வெளிநாட்டவர்களை உடனடியாக நாட்டை விட்டு வெளியே றும்படி அரசு

### முழுஅளவினதான

கள். அந்த அளவிற்கு அப்பாவி பொதுமக்கள் மீது குண்டுவீசிகொலைசெய்கின்ற சிங்கள இராணுவம் மிகப் பெரும் சீற்றத்துடன் இருக்கின்றது. இந்த இராணுவ நடவடிக்கைகளை எதிர்கொள்ள நாம் தயாராகாது விட்டால் நிச்சயம் அழிவுகளை சந்தித்தேயாக வேண்

## கூடுதல் அதிகாரம் பெற யெல்ட்சினுக்கு அங்கீகாரம்

ரஷ்யாவில் அதிபர் பொறிஸ் யெல்ட்சின் தமக்கு கூடுதலான அதிகாரங்களைப் பெற வழிசெய்யும் புதிய அரசியலமைப்புக்கான அங்கீகாரத்தைப் பெறுவதில் வெற்றி

திற்கும் அதிகமானோரர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை எனவும் கூறப்படுகிறது.

சிறிமாவோ பண்டார நாயக்கா இவ்வாறானதொரு நிலைப்பாட்டை எடுத்திருப்பினும், விரைவானதீர்விற்கான வழிவகையை இதுவரை கூறவில்லை. அதாவது இனப்பிரச்சினைதான் என்றாலும், அதற்கு அரசியல் ரீதியான தீர்வு எதற்கும் அவர் வழிவகை கூறவில்லை. அத்தோடு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களும் சிறிமாவோவின் இக்கோரிக்கையை முழுமையாக ஆதரிக்கின்றார்களா என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், சுதந்திரக்கட்சியினர் பலர் இன்னமும் இராணுவத் தீர்வு பற்றியே பேசுகின்றனர்.

இந்தவகையில் சிறிமாவோவின் நிலைப்பாட்டின் நம்பிக்கைத் தன்மை சந்தேகத்திற்குரியதாகியதே. இருப்பினும், பேச்சளவில்தானும் வடக்கு - கிழக்குப் பிரச்சினை ஒரு தேசிய இனப்பிரச்சினை என்ற நிலைப்பாட்டை சுதந்திரக் கட்சி எடுக்கமுனைவது ஒருபடி நிலை மாற்றம் என்பதில் சந்தேகமில்லை.

சிறிமாவோவின் இந்நிலைப்பாட்டை ஒத்ததாக அடுத்த பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசாநாயக்காவின் அறிவிப்புகளும் உள்ளன. ''சிக்கலான அரசியல் பிரச்சினைக்கு தளம்பிய அரசாங்கத்தின் மூலம் தீர்வு காண முடியாது'' எனத் தெரிவித்துள்ள காமினி திசாநாயக்கா ''தேசிய இனப் பிரச்சினையின் காரணமாக ஆரம்பித்த கெரில்லாச் சண்டை, தற்பொழுது நாட்டைப் பிரிக்கும் அளவிற்கு யுத்தமாகப் பரிணமித்துள்ளது'' என்றார்.

இவரும் சிறிமாவோ பண்டாரநாயக்கா போன்றே இனப்பிரச்சினை அரசியல் பிரச்சினை என்பதை ஏற்றுக் கொள்ளினும் தீர்விற்கான வழிமுறைகளைக் கூறவில்லை. ஆனாலும் 1992ஆம் ஆண்டுவரை ஐக்கிய தேசியக் கட்சியிலும், அதன் அரசாங்கத்திலும் முக்கிய உறுப்பினராக இருந்துள்ள காமினி திசாநாயக்கா, இன்று இலங்கையில் இனப்பிரச்சினை உள்ளது. அதற்கு அரசியல் தீர்வே ஒரே வழி எனத் தெரிவித்திருப்பது முக்கியமானது என்பதில் சந்தேகமில்லை.

எதிர்க்கட்சிகளின் இம்மாற்றமானது, ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிர் நடவடிக்கை என்ற ரீதியில் அமைந்தாலும் சரி, தமிழரிடம் இருந்து வாக்கு வங்கியை நிரப்பும் நடவடிக்கையாக இருந்தாலும் சரி, வடக்கு - கிழக்கில் உள்ள பிரச்சினை தமிழரின் தேசிய இனப்பிரச்சினை என எதிர்க்கட்சிகள் தெரிவிப்பது இப்பிரச்சினை இலகுவாகத் தீர்க்கக் கூடிய பிரச்சினை அல்ல சிக்கல்கள் நிறைந்த பிரச்சினை என்பதை எதிர்க்கட்சிகள் ஏற்றுக் கொண்டதாக கருதவே இடமுண்டு

ஆனால். இது மட்டும்போதாது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வா? இராணுவத் தீர்வா? என்பதையும் எதிர்க்கட்சியினர் வெளிக்காட்டவேண்டியது அவசியமாகிறது. இதற்கானதீர்வை உலக அனுபவத்தின் ஊடாக எதிர்க்கட்சிகள்எடுக்க வேண்டும். அவ்வாறு புரிந்து கொள்ளத் தவறும் பட்சத்தில் எதிர்க்கட்சிகள் இனப்பிரச்சினை தொடர்பாக மேற் கொண்ட அரசியல் நிலைப்பாட்டு மாற்றங்களில் பயனேதும் கிட்டிவிடப்போவதில்லை.

அத்தோடு சிங்களக் கட்சிகள் மீது - அரசாங்கக்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி-தமிழ் மக்கள் அவர்களின் கூற்றுக்களை நம்பிவிடப் போவதில்லை. ஏனெனில், கடந்த காலத்தில் தமிழ்த்தேசிய இனத்தை சிங்கள அரசியல் கட்சிகள் எவ்வாறு பகடைக்காய்களாகப் பயன் படுத்தினர் என்பதை தமிழ் மக்கள் மறந்துவிடும் நிலையில் இல்லை. இந்நிலையில், சிங்களக் கட்சிகள் எவையாக இருந்தாலும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதானால், அவர்களின் சுயநிர்ணய உரிமையை முதலில் அங்கீகரிக்க வேண்டும். அவ்வாறு செய்யின் இனப்பிரச்சினை குறித்த எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு பற்றித் தமிழ் மக்களைச்சிந்திக்க வைக்கலாம்.

(கொழும்பு)

அடுத்த ஆண்டில் பலமுறை நிலநடுக்கம் ஏற்படும் எனவும் இதனால் பெரும் சேதங்கள் ஏற்படும் எனவும் ஆரூடக் கணக்கின்படி அறிவிக்கப்பட்டுள்ளது

தமிழகத்தில் பல இடங்களில் பூமி நடுக்கம் ஏற்பட்டுள்ளது. திருவனந்தபுரம் பகுதியிலிருந்து 200மைல் தூரத்தில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட அதிர்ச்சியே இந்த பூமி அதிர்ச்சிக்கு காரணமென தமிழக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

மேலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலம் 30 மில்லியன் ரூபாவை அரசு வருமானமாக பெற்றுள்ளது எனவும் இது அடுத்தவருடம் 40 மில்லியனாக அதிகரிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

கிறது.

போதைப்பொருள் குற்றத்திற்கான தண்டனை விதிக்கப்பட்ட அமீன் என்பவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தசமயம் சென்னைக்கு தப்பிச் சென்றுவிட்டதாகவும் இதேபோன்று மற்றும் மூவர்

கூட்டுறவுச் சங்கம் சங்க அங்கத்தவர்களுக்கு இதுவரை 500 சைக்கிள்களை வழங்கியுள்ளது. மேலும் 250 சைக்கிள்களை வழங்க இச்சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. (யோ)

---

## குழந்தையாய்

மக்கள் வான்தாக்குதலுக்கு மத்தியிலும் தமது உயிரையும் துச்சமென மதித்து எமக்கு உதவினர்

எமதுவளர்ச்சிக்காகப் பாடுபட்டு உயிரையும் துச்சமென மதித்து பூநகரிக் களநிகழ்வில் பங்கெடுத்துக் கொண்ட அனைவருக்கும் கடற்புலிகளின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்'' எனதெரிவித்தார்.

மேலும்பேசும்போது ''கிளாலிக் கடற்பரப்பில் நூற்றுக்கணக்கான அப்பாவிப்பொதுமக்கள் சிங்களப்படைகளால் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்ட சமயங்களிலும் இக்கடற்பரப்பில் சிறிலங்காப்படைகளுடன் இருந்து வந்த ஆதிக்கப்போட்டியின் போது கடற்புலிகளின் தாக்குதற்படைத் தளபதி சாள்ஸ் வீரச்சாவைத் தழுவிய போதும் எத்தனையோ கடற்புலிகள் தங்களை அழித்து எதிரியின் கடற்படைக் கப்பல்களைத் தகர்க்க வேண்டும் என்பதில் குறியாக நின்றார்கள் அந்த நிகழ்வைச் சாதித்தும் காட்டினார்கள் எனினும் இந்தப் பூநகரித்தளம் முழுமையாக நிர்மூலமாக்கப்படவேண்டும்.

கிளாலி நீரேரியில் எவ்வளவு தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டார்களோ அதைவிட மேலாக இந்த நிகழ்வுக்கெல்லாம் காரணகாத்தாக்கள் இதே நீரேரியில் மிதந்தனர்.

இன்று கூட பூநகரி, நாகதேவன்துறை கடற்பரப்பில் கொல்லப்பட்ட சிங்களப்படைகளது சடலங்கள் மிதந்து கொண்டிருக்கின்றன சிறிலங்காவின் நாகதேவன்துறைக் கடற்படைத்தளம் கைவிடப்பட்டிருக்கிறது. அதேபோன்று அடுத்தடுத்து சிங்களப் படைகளால்படைத்தளங்கள் கைவிடப்பட வேண்டுமாக இருந்தால் எமக்கு ஆட்பலம் தான் தேவையாக உள்ளது'' என்றும் கூறினார்.

எமது பூநகரி வெற்றியை முறியடிக்கும் முகமாக குடாநாட்டின் ஏதோ ஒரு முனையில் தாக்குதல் வியூகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது இந்தமுயற்சியில் தென்னிலங்கையில் இராணுவத் தளபதிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் தான் யாழ். அரச அதிபர் கொழும்பு சென்று ஆலயங்கள் மீதும், தேவாலயங்கள் மீதும், குடியிருப்புக்கள் மீதும் குண்டு வீச்சு நடாத்த வேண்டாம் என்று கூறிய போது இவ்வாறான தாக்குதல்கள் தொடர்ந்தும் நடைபெறும் என்பதை ஆணித்தரமாக அரசு அறிவித்திருக்கிறது. எதிரியானவன் பேச்சுவார்த்தைக்கு தயாராக இல்லை மீண்டும் மீண்டும் போர் முரசு கொட்டிக் கொண்டிருக்கின்றான் என்றார்.

மேலும் பேசும் போது பூநகரித் தளத்தை தகர்க்கும் முயற்சியின் போது கடற்கரும்புலியாகச் சென்று காவியம் படைத்த கணேசின் படகின் இயந்திரத்தை நேற்றைய தினம் கடற்புலிகள் மீட்டுவந்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆனையிறவில் நாம் பூரண வெற்றி பெறாமைக்கு காரணம் வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட இராணுவம் மூலம் புதிய போர்முனை திறக்கப்பட்டது. ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குள் கடற்புலிகள் பெரியதொரு வளர்ச்சி கண்டுள்ளோம். தலைவரின் திட்டமிட்ட வழிநடத்தலால் கடற்புலிகளுக்குள் பெரியதொரு மாற்றம். இந்த நிகழ்வு தான் பூநகரி வெற்றிக்கு காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

## நாடு திரும்ப பணிப்பு

அல்ஜீரியாவிலுள்ள அமெரிக்க நாட்டவர்களை உடனடியாக நாடு திரும்புமாறு அமெரிக்கா அவசர உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது. அல்ஜீரியாவில் அங்குள்ள வெளிநாட்டவர்களை உடனடியாக நாட்டை விட்டு வெளியேறும்படி அடிப்படைவாத முஸ்லிம்கள் மிரட்டல் விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## முழுஅளவினதான

கள். அந்த அளவிற்கு அப்பாவி பொதுமக்கள் மீது குண்டுவீசிகொலைசெய்கின்ற சிங்கள இராணுவம் மிகப் பெரும் சீற்றத்துடன் இருக்கின்றது. இந்த இராணுவ நடவடிக்கைகளை எதிர் கொள்ள நாம் தயாராகாது விட்டால் நிச்சயம் அழிவுகளை சந்தித்தேயாக வேண்டும்

இன்று தென்தமிழீழத்திலே அந்த ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. அங்குபல இளைஞர்கள் கோரமாக கொல்லப்படுகின்றனர். பெண்கள் பாலியல் வன்முறைக் குட்படுத்தப்படுகின்றனர் அங்கு இராணுவம் தன்னுடைய மேல் நிலையில் இருந்து கொண்டு அடக்குமுறைக்குள் எங்கள் மக்களை சிக்க வைத்துக் கொண்டிருக்கின்றனர். மக்கள் அகதிகளாக அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்கின்றனர். பல கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இந்த நிலை எமக்கும் ஏற்பட்டு விடக் கூடாது.

பூநகரித் தளம் அழிக்கப் பட்டதனால் சிறிலங்காஇராணுவக்கட்டமைப்பிலே ஒரு மிகப் பெரும் உடைவு ஏற்பட்டிருப்பதை அண்மைக்கால செய்திகள் மூலம் அறிந்திருப்பீர்கள், அரசிற்கும் இராணுவத்திற்குமிடையே பெரும் நெருக்குதலை இது கொடுத்திருக்கின்றன இந்தப் பூநகரி முகாம் தகர்ப்பு இராணுவத்தினர் மத்தியிலே பெரும் மனக்கிலேசத்தை ஏற்படுத்தியிருக்கின்றது இராணுவத் தலைமைகள் மாற்றப்பட்டிருக்கின்றன ராணுவரீதியாக இந்த விடுதலைப் போரை உடைத்து விடலாம் தமிழீழ மக்களின் உரிமையை பறித்து விடலாம் என நினைத்த சிங்கள அரசிற்கு ஒரு பெரும் அடியை கொடுத்திருக்கிறது. இந்த பூநகரித் தளம் அழிப்பு இன்று சர்வதேச ரீதியாக ஒரு மிகப்பெரும்மாற்றத்தை- விடுதலைப்புலிகளின் வளர்ச்சியை இன்று சர்வதேசத்தில் மிகப் பெரிய நிலைக்கு உயர்த்தியுள்ளது. இந்த வெற்றி நிரந்தர மாக்கப்பட வேண்டும்.

எமது எதிர்கால சந்ததிகளின் வாழ்க்கைக்கு இந்த வெற்றிகள் குவிந்து கொண்டிருக்க வேண்டும்.

நாற்பது ஆண்டுகளின் முன் தமிழர்களை இழிவாக எண்ணிய சிங்களவர்கள் இன்று யுத்தம் வேண்டாம் புலிகளும் மனிதர்களே என்று கூறுகின்றனர் இந்தநிலையை உருவாக்கிய பெருமை எமது தேசியத்தலைவர் பிரபாகரனையே சாரும்.

இன்று இராணுவம் என்ன செய்கிறதுஎன்பதை மறுபுறத்தில் நாம்பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இராணுவம் மிகப்பெரும் தோல்விகளை அடுக்காகச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. ஒரு மிகப்பெரிய இராணுவம் சந்தித்த இந்தத் தோல்விகளிலிருந்து இராணுவம் ஒரு புதிய பரிமாணத்தை பெற முயன்றுகொண்டிருக்கிறது.

ஒரு புதிய கட்டமைப்பை இராணுவம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. புதிய இராணுவத் தலைமையை இன்று உருவாக்கிபுள்ளது. அந்த தலைமையின் கீழே தமிழீழப் பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்காக புதிய திட்டங்களை அமுல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், பல இராணுவத்தினரை கொண்டுவந்து குவித்த வண்ணமுள்ளனர். நீங்கள் அண்மைக் காலமாக அவதானித்திருப்பீர்கள் என்றுமே இல்லாதவாறு விமானங்கள் அடிக்கடி வந்து பறந்து செல்கிறது.

கிழக்கிலே பல படை முகாம்கள் அகற்றப்பட்டு அங்கிருந்த இராணுவத்தினர் வேறு இடங்களுக்கு மாற்றப் பட்டுள்ளனர் இராணுவத்தினர் மத்தியில் நம்பிக்கையை ஊட்டுவதற்காகவே தற்காலிகமாக அவர்கள் ஒரு பாரிய இராணுவ வெற்றியை ஈட்ட வேண்டும் என்ற ஒரு கட்டாயத்தேவை இவர்களுக்கு இருக்கிறது, இன்று அரசிற்கும் ஒரு பெரிய வெற்றியை ஈட்டியபின்னர்தான் சிங்கள மக்கள் மத்தியிலே பேசக்கூடிய நிலையுள்ளது பெரும்பாலும் புதிய ஆண்டில் ஒரு தாக்குதலுக்கு தயாராகி வருகிறான்,

இன்று அந்த பூநகரிமுகாம் அழிக்கப்பட்டு நிரந்தரமாக எங்கள் பிடிக்குள் இல்லாமல் இருப்பதற்கான காரணத்தையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த போரில் ஏற்பட்ட உயிரிழப்பை ஈடுசெய்யவேண்டியுள்ளது. போராளிகள் பற்றாக்குறை காரணமாக எமது ஆயுதங்களை ஏந்துவதற்கு எமது முகாம்களை நிரப்புவதற்கு எதிரி முகாமை தாக்கி அழிப்பதற்கு போராளிகளின் பற்றாக்குறையே காரணம் என்பதை இப் பூநகரித் தாக்குதல் நிரூபித்து நிற்கிறது.

எமது படைபலம் அதிகமாக இருக்குமானால் புலிகளின் கரத்தை நீங்கள் பலப்படுத்துவீர்களானால் நிச்சயமாக எமது பிரதேசத்தை நாம் மீட்டெடுக்க முடியும். பல முகாம்களையும் தாக்கி அழிக்க முடியும் என்ற நம்பிக்கை இப்போது ஏற்பட்டுள்ளது என்றார்,

> சூழலைக் காப்பாரே வாழ்வார் - மற்றெல்லாம்
> நோயதன் பின் சென்று மாள்வார்

## கூடுதல் அதிகாரம் பெற யெல்ட்சினுக்கு அங்கீகாரம்

ரஷ்யாவில் அதிபர் பொறிஸ் யெல்ட்சின் தமக்கு கூடுதலான அதிகாரங்களைப் பெற வழிசெய்யும் புதிய அரசியலமைப்புக்கான அங்கீகாரத்தைப் பெறுவதில் வெற்றி பெற்றுள்ளார். நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட நாடுதழுவிய வாக்கெடுப்பில் 60 சதவிகிதமான ஆதரவை அவர் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கசக்கிஸ்தான் உட்பட மற்றும் சில பிரதேசங்களில் 50 சத விகிதத்திற்கும் அதிகமானோரர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை எனவும் கூறப்படுகிறது.

## பரீட்சை ஒத்திவைப்பு

நாளை நடைபெறவிருந்த கனிஷ்ட தொழில்நுட்பப் பத்திரத்துக்கான பரீட்சை அத்திகதியில் நடைபெறமாட்டாதெனவும் பிறிதொரு திகதியில் நடாத்தப்படுமென்றும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# சமூகசேவைபகுதியை இயங்கவிடாது இன்று காலை மறியல் போராட்டம்

## கூட்டுறவுச் சபை நடாத்தும்

(யாழ்ப்பாணம்)

இன்றுகாலை சமூக சேவைப்பகுதியை இயங்கவிடாது மறியல் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக மாவட்ட கூட்டுறவுச் சபையினர் அறிவித்துள்ளனர் மாணவர் மதிய உணவு முத்திரைக்கான கொடுப்பனவை நீண்டகாலமாக வழங்காமையை முன்னிட்டு, பண்டிகைகாலத்தின் போது தேவையான பொருள்களை கடனாக தருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை வெற்றியளிக்காமையை முன்னிட்டும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தமறியல் போராட்டத்தை நடாத்த முடிவு செய்ததாக மாவட்ட கூட்டுறவு சபை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டப.நோ.கூ: சங்கங்கள் பாடசாலை மாணவர்களுக்கான உணவு முத்திரைக்கு 50 சதவீத முற்பணத்தை சமூக சேவைபகுதி பெற்று முத்திரைக்கான பொருள்களை கடந்த காலங்களில் வழங்கிவந்தது. கூட்டுறவு சங்கங்கள் தம்'து சொந்தப்பணத்தில் 4 கோடி ரூபாவை இதற்கான செலவிட்டிருந்தது எனினும் இதற்கென கொடுப்பனவை சமூக சேவை பகுதி இவ்வருடம் தை மாதம் முதல் வழங்கவில்லை.

நத்தார், புதுவருடம்தைப் பொங்கல் பண்டிகைகளுக்கு பாவனையாளருக்கு வழங்க தேவையான பெருள்களை கடனாக தருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை வெற்றியளிக்கவில்லை. இக்காரணங்களினால் மறியல் போராட்டத்தில் குதிக்க மாவட்ட கூட்டுறவு சபை முடிவு செய்ததாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (22)


## பிறந்ததின வாழ்த்து

### செல்வன் சிறீதரன் டிலக்ஷன் (14.12.93)

திரு. இ. சிறீதரன் திருமதி. றோ. சிறீதரன் ஆகியோரின் புதல்வன் டிலக்ஷன் தனது முதலாவது பிறந்ததினத்தை கோப்பாயில் உள்ள தனது இல்லத்தில் குதூகலமாக கொண்டாடுகின்றார்.

இவரை துர்க்கையம்மன் அருள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

'இறாஸ் கொப்பேர்ஸ்'

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை. (சி-8120)

## யாழ். மிட் ரவுண் றோட்ரறக்ற் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டத் தொடர்

இடம்;- பல்கலைக்கழக மைதானம்
காலம்:- 14-12-93 இன்று மாலை 3-00 மணி

பாடுமீன் எதிர் சென்நீக்லெஸ் விளையாட்டுக் கழகம்
சென் மேரீஸ் எதிர் சென் அன்ரனீஸ்

(6888)

## அறிவித்தல்


## போர்

பாதுகாக்க வேண்டுமானால் நவீனரக உலங்குவானூர்திகள் அவசியம் என வலியுறுத்தப்பட்டதாகவும் அறிய முடிகிறது.

அத்தோடு, பூநகரிப் படைத் தளத்தில் இருந்து புலிகள் பல நவீன்ரக ஆயுதங்களைக் கொண்டு சென்றுள்ளதால் அதைவிட. நவீன ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும் எனவும் வற்புறுத்தப் பட்டதாகவும் தெரியவருகின்றது.

## பாறலஜின்

ஏற்கனவே பாவனையிலுள்ள நோ பூச்சு மருந்து சிலவற்றில் வியாபாரப் பெயர்களில் சிறு மாற்றங்கள் செய்து, பாவனையாளர்களை ஏமாற்றும் நோக்குடன் இந்த மருந்து வகைகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதாக உணவு மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி தி. மகாதேவன் தெரிவித்தார். இந்த மருந்து வகைகள் குறித்துப் பொது மக்கள் அவதானமாக இருக்கும்படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## ஜெரிசில்வா

போவதில்லை என்பதையே இது காட்டுவதாகவும் இக்கட்டுரை குறித்து கருத்து வெளியிட்ட பி. பி. ஸி. தெரிவித்தது.

சிசில்வைத்தியரெட்னவிற்கு வெளிநாட்டு தூதரக பதவி கிடைக்கும் என செய்திகள் அடிபடும் இவ் வேளையில் அவரின் இந்த சர்ச்சைக்குரிய கருத்துகள் ஒரு மோசமான நிலையில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் பி.பி.ஸி. சுட்டிக் காட்டியது. இராணு

## வீரச்சாவு



வீரவேங்கை

தம்பித்துரை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பகுதியில் கடந்த 11ஆம் திகதி காலை தடை அகற்றச் சென்ற தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கி இருந்து தாக்கியதில் ஒருவர் வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த வீரவேங்கை தம்பித்துரை (நாகேஸ்வரன் ஈஸ்வரன்-அளவெட்டி யாழ்ப்பாணம் தற்போதைய முகவரி இடதுகரை முத்தையன் கட்டு, முல்லைத்தீவு)என்னும் போராளிக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## மூன்றாம்

டனர்:

பூநகரி கூட்டுப்படைத் தகர்ப்பு வெற்றிவிழா இறுதி நாள் பொதுக் கூட்டம் பருத்தித்துறை பழைய பஸ் நிலையத்தில் நடைபெற்றது. மாலை 4.00 மணிக்கு கிராமக்கோட்டடிச் சந்தியில் இருந்து பருத்தித்துறை மைதானம் நோக்கி பேரணிகள் ஆரம்பமாகின.

முதலாவதாக மகளிர்படைபிரிவின் அணிவகுப்பும் இரண்டாவதாக கடற்புலிகளின் கடற்படை பயிற்சிப் பள்ளி பிரிவினரின் அணிவகுப்பும், மூன்றாவதாக மாணவர் அமைப்பின் அணிவகுப்பும் பான்ட் வாத்திய இசையுடன் புறப்பட்டன.

அதனைத் தொடர்ந்து பூநகரி நாகதேவன்துறை கடற்படைத்தகர்ப்பின்போது புலிகளால் மீட்கப்பட்ட விசைப்படகு, டாங்கியின் மாதிரி வடிவமைப்புக் கொண்ட ஊர்தியும், பருத்தித்துறை வர்த்தக சங்கத்தினரின் ஊர்தியும், கலை பண்பாட்டுக் கழகத்தினரின் ஊர்தியும் ஒன்றன்பின் ஒன்

## மூன்றாவதுசகாப்

விட்டு இராணுவம் தானாகவே பின்வாங்கிக் கொண்டது.

படைகள்பின்வாங்கல் போன்ற பல வீரவரலாற்று நிகழ்வுகள் எல்லாம் இந்த மூன்றாவது வீர சகாப்தத்திலேயே நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

1983 இல் திருநெல்வேலியில் நடத்திய தாக்குதலில் 13 இராணுவம் உயிரிழந்த போது அவ் உடல்களை மீட்க அவ்விடத்துக்கு சில நிமிடங்களுக்குள் இராணுவம் வந்து சேர்ந்தது ஆனால்இப்போது 1993-ம் ஆண்டு வடதமிழீழத்தில் பலமான கூட்டுப் படைத் தளம் எம்மிடம் முழுமையாக வீழ்ச்சியடைந்து ஆயிரத்திற்கு மேலான இராணுவம்கொல்லப்பட்டபோது இராணுவத்தால் முன்னர் போல் அங்கு வருவதற்கு நினைத்துப் பார்க்கவே முடியாது தடுமாறி நின்றது. தர்மத்தின் அடிப்படையில் நாம் தான் இராணுவ உடல்களை கொழும்பிற்கு அனுப்பமுனைந்தோம்.

1992இல்வலம் புரி இராணுவ நடவக்கையின் போது தளபதிகளினதும் இராணுவ அதிகாரிகளினதும் திட்டங்களோடு எமது பூநகரி மண் அவர்களிடம் பிடிபட்டது அங்கே முப்படைத் தளபதிகளினதும் பாதுகாப்பு அமைச்சினதும் இராணுவ அதிகாரிகளினதும் எண்ணங்களின்படி படைகளைக் குவித்தார்கள். டாங்கிகளையும் நீருந்து விசைப்படகுகளையும் இராணுவ தளபாடங்களையும் இறக்கி எமது மக்களுக்கும் எமக்கும் எதிராக குறி வைத்து திருப்பிவிட்டனர். எமது மக்களின் வயல்களிலெல்லாம் மிதிவெடிகளை விதைக்கத் தொடங்கினர். அன்றிலிருந்து முகாம் தாக்குதல் நடைபெறும் முதல்நாள் வரை வேவுப் படையினர் கொடுக்கும் சிறுசிறு தகவல்களின்படி ஒட்டுமொத்தமாக எமது தலைவர் இராணுவ கூட்டுப்படைகளினதும் பாதுகாப்பு அமைச்சினதும், இராணுவத்தளபதிகளினதும், அதிகாரிகளினதும் பாதுகாப்புத் திட்டங்களை எல்லாம் உடைத்தெறிய ஒரு புதிய மாற்றுத்திட்டத்தை வகுத்தார். பயங்கரமான இராணுவக்காவலரண்களுக்குமுன்னால் காட்சிதரும் முட்கம்பிவேலியை சத்தமின்றி வெட்டுவதிலிருந்து மக்கள் பார்த்து வியக்கும் டாங்கியை இயக்குவது வரை எமது போராளிகள் பயிற்சி பெற்றனர். இரவு பகலென நினையாது செயற்பட்டனர். அதன் பலன்தான் இந்த வெற்றி.

# கிழக்கில் சுற்றிவளைப்புகள் 10 பொது மக்கள் கைது

(திருமலை)

திருமலை மாவட்டத்திலுள்ள பூநகர், பூமரத்தடி ஆகிய கிராமங்களை கடந்த 5 ஆம் திகதி சுற்றிவளைத்த அதிரடிப்படையினர் 7 தமிழ்ப் பொதுமக்களை கைதுசெய்துள்ளனர்.

மேற்படி கிராமங்களை சுற்றிவளைத்த அதிரடிப் படையினர் பூமரத்தடியைச் சேர்ந்த குடும்பஸ்தர்களான சுப்பிரமணியம் மகேந்திரன் (வயது 25), ரட்ணசிங்கம் மனோரஞ்சிதம் (வயது 27), பாக்கியராசா அன்னக்கிளி (வயது 30), ஆகியோரையும் பூநகரை சேர்ந்த மகாலிங்கம் செம்பாத்தை (வயது 28), ரவீந்திரன் (வயது 24), ஆகியோரையும் முட்டிச் சேனையை சேர்ந்தவரான தெய்வேந்திரராசா அழகுராணி (வயது 29) என்பவரையுமே கைதுசெய்து கொண்டு சென்றுள்ளனர்.

இதுபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஒன்பதாம் திகதி அதிகாலை 5 மணியளவில் பலாச்சோலை, காக்காச்சிவெட்டை கிராமங்களை சுற்றிவளைத்த வெல்லாவெளி சிறிலங்கா அதிரடிப்படையினர் மூன்று பொதுமக்களை கைதுசெய்து வெல்லாவெளி முகாமிற்கு கொண்டுசென்றுள்ளனர்.

பலாச்சோலையை சேர்ந்த காசுபதி பூபாலசிங்கம் (வயது 22), சிங்கன் குமரன் (வயது 21), இளயதம்பி தர்மன் (வயது 19) ஆகியவர்களே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

## முன்எப்பொழுதும்

பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கடற்புலிகளின் மகளிர் படைத்தளபதி செல்வி நளாயினி தெரிவித்தார்,

இக் கூட்டத்தில் அவ* தொடர்ந்து பேசும் போது ''பூநகரித் தளம் மீது நாம் நடாத்திய தாக்குதல் போன்று கடந்த காலத்தில் இப்படி ஒரு தாக்குதலையும் மகளிர் படைகள் இணைந்து நடாத்தவில்லை. ஆனால் இன்று எமது தேசியத் தலைவரின் தலைமையில் மகளிர் படையணி கடலிலும் தரையிலும் ஒரே நேரத்தில் இணைந்து எதிரியின் கூட்டுத் தளம் மீது தாக்குதலை நடாத்தியுள்ளது.

எமது தலைவரின் தலைமையில் உருவாக்கப்பட்ட மகளிர் படையணி இன்று கடல், தரை ஆகியவற்றில் நடைபெறும் மரபுரீதியான சமரில் பங்குபற்றி ஒரு இராணுவ அணியாக உருவாக்கம் அடைந்துள்ளது'' என்றார்.

மேலும் பூநகரி கூட்டுப் படைத்தளம்மீது நடாத்தப்பட்ட பெரும் தாக்குதல் நடவடிக்கையானது சிறிலங்கா அரசுக்கு இராணுவ, அரசியல் ரீதியாக பெரும் அடியாக விழுந்துள்ளது. இந்த வெற்றிக்கும், எமது வளர்ச்சிக்கும் நம்பிக்கையூட்டியது எமது தேசியத் தலைவர்தான் என்றும் தெரிவித்தார்.

பூநகரிக் கூட்டுத்தளம்மீது நடாத்தப்பட்ட தாக்குதல் ஒரு பெரிய கடற்போர் அல்ல. எதிர்காலத்தில்தான் சிறிலங்கா அரசுக்கெதிராக பெரும் கடற்போர்களை நடாத்தத் தொடங்குவோம். இவ்வாறான பெரும் சண்டைகளை நடாத்தப் போவது வேறுயாரும் இல்லை. உங்களது பிள்ளைகள் தான். இவர்களது தியாகத்தால் தான் பூநகரிக் கூட்டுத்தளம் தகர்த்தெறியப்பட்டது என்றும் தெரிவித்தார்.

விரட்டுவோம் எமது விடுதலைப் போராட்டத்தின் இந்த மூன்றாவது சகாப்தப் போராட்டத்திலே எமது தாயகத்தை முழுமையாக விடுவித்து புதிய நாட்டில் சுதந்திரமாய் சமதர்ம தமிழீ

## கூட்டம்

''றுகுணு கப்பலில் வந்து சேர்ந்துள்ள விதை உருளைக் கிழங்கு விநியோகம் சம்பந்தமாகவும், விலை நிர்ணயம் செய்வது சம்பந்தமாகவும், ஒரு கூட்டம்இன்றுபி.ப. 2 00 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறும். இக் கூட்டத்திற்கு மாவட்ட விவசாய விலைநிர்ணய உப குழுவின் உறுப்பினர்களைச் சமுகமளிக்குமாறு மாவட்டப் பிரதி ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கிழக்கு

முகாம் எதுவும் இல்லை.

இதே வேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் மகிழவெட்டுவான் சிவத்தைப் பாலத்தில் அமைந்திருந்த இராணுவ முகாமையும் கடந்த மாதம் 24ஆம் திகதி மூடி

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை. (சி-8120)

# யாழ். மிட் ரவுண் றோட்ரறக்ற் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டத் தொடர்

இடம்;- பல்கலைக்கழக மைதானம்
காலம்:- 14-12-93 இன்று மாலை 3-00 மணி

பாடுமீன் எதிர் சென்நீக்லெஸ் விளையாட்டுக் கழகம்
சென் மேரீஸ் எதிர் சென் அன்ரனீஸ்

(6888)

# அறிவித்தல்


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறையினர் 14-12-93 இன்று நண்பகல் 1 மணிக்கு நுண்கலைத்துறை மண்டபத்தில் இசைக்கச்சேரி நடத்த உள்ளனர்.

பாட்டு;- சங்கீத வித்துவான் ஏ. கே. கருணாகரன்
வயலின்.- வாத்ய கலைமணி பி. கண்ணன்
மிருதங்கம்.- சங்கீத ரத்னம் எஸ். மகேந்திரன்

இசை ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(6887) கவின்கலை மன்றத்தினர்

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் சிறிதரன் டிலக்ஷன்

தெல்லிப்பழையைச் சேர்ந்த சிறீதரன் றோகினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் டிலக்ஷன் தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (14-12-93) இருபாலையில் வசிக்கும் தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, கண்டி மாமி, மாமா, பிரான்ஸ் சித்தப்பா, லண்டன் மாமி, லண்டன் சித்தப்பா, பெரியப்பா, பெரியம்மா, ஆசையப்பா, ஆசையம்மா, ஜேர்மன் சித்தா அன்ரா, ஜேர்மன் மாமா, மாமி, ஜேர்மன் கேமா அக்கா, பிரியா அக்கா மற்றும் அண்ணைமார், உறவினர் அனைவரும் துர்க்கை அம்மன் அருள்பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

(சி-8126(

விற்பனைக்கு விடப்பட்டுள்ளதாக உணவு மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி தி. மகாதேவன் தெரிவித்தார். இந்த மருந்து வகைகள் குறித்துப் பொது மக்கள் அவதானமாக இருக்கும்படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## ஜெரிசில்வா

போவதில்லை என்பதையே இது காட்டுவதாகவும் இக் கட்டுரை குறித்து கருத்து வெளியிட்ட பி. பி. ஸி. தெரிவித்தது.

சிசில்வைத்தியரெட்னவிற்கு வெளிநாட்டு தூதரக பதவி கிடைக்கும் என செய்திகள் அடிபடும் இவ் வேளையில் அவரின் இந்த சர்ச்சைக்குரிய கருத்துகள் ஒரு மோசமான நிலையில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் பி.பி.ஸி. சுட்டிக் காட்டியது. இராணுவத்தை தோல்வியடைந்து வரும் இராணுவம் என அவர் அண்மையில்கூறியதாக வெளியான பத்திரிகைச் செய்திகளை அவர் மறுத்துள்ள போதிலும் இதை பலர் நம்பவில்லை. இவை உண்மையோ பொய்யோ இக் கருத்துகள் இராணுவத்தினரின் ஊக்கத்திற்கு நல்லதல்ல எனவும் பி. பி. ஸி. மேலும் குறிப்பிட்டது.

இத்துறை பழைய பஸ் நிலையத்தில் நடைபெற்றது. மாலை 4.00 மணிக்கு கிராமக்கோட்டடிச் சந்தியில் இருந்து பருத்தித்துறை மைதானம் நோக்கி பேரணிகள் ஆரம்பமாகின.

முதலாவதாக மகளிர்படைபிரிவின் அணிவகுப்பும் இரண்டாவதாக கடற்புலிகளின் கடற்படை பயிற்சிப் பள்ளி பிரிவினரின் அணிவகுப்பும், மூன்றாவதாக மாணவர் அமைப்பின் அணிவகுப்பும் பான்ட் வாத்திய இசையுடன் புறப்பட்டன.

அதனைத் தொடர்ந்து பூநகரி நாகதேவன்துறை கடற்படைத்தகர்ப்பின்போது புலிகளால் மீட்கப்பட்ட விசைப்படகு, டாங்கியின் மாதிரி வடிவமைப்புக் கொண்ட ஊர்தியும், பருத்தித்துறை வர்த்தக சங்கத்தினரின் ஊர்தியும், கலை பண்பாட்டுக் கழகத்தினரின் ஊர்தியும் ஒன்றன்பின் ஒன்றாக பின் தொடர்ந்தன.

மற்றும் உரும்பராய் சிவாஜினி மாணவிகளின்கோலாட்டம், சுப்பர்மடம் இளைஞர்களின் கரகாட்டம் மற்றும் கரகாட்டங்களும், மேளதாள வாத்திய இசையுடன் மைதானத்தை வந்தடைந்தன.

இவ் ஊர்வலத்தின்போது பருத்தித்துறை, நெல்லியடி, மாணவர்களின் பேரணி தொடர்ந்தது. இவர்கள் பூநகரி வெற்றி நாள் என்று பொறிக்கப்பட்ட பதாகைகளுடன் வந்தனர். பேரணி ஆரம்பமாகும்போது கிராமக் கோட்டடியில் புகைக்கூண்டுகளும் வானில் விடப்பட்டன.

பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு தமிழ்பேசும் போக்குவரத்து சங்க பருத்தித்துறை சாலை ஊழியர்கள் குளிர்பானம் வழங்கினர். பேரணி மைதானத்தை வந்தடைந்ததும் அணிவகுப்புகள் இடம்பெற்றன. தமிழீழ தேசியக் கொடியை வடமராட்சி சிறப்பு பொறுப்பாளர் திரு. ரவி ஏற்றிவைத்தார், மைதானத்தில் சிறுவர்களின் காவடி ஆட்டம், சிறுமியரின் கோலாட்டம் மற்றும் கரகாட்டங்கள் என்பனவும் நடைபெற்றன.

இதைத் தொடர்ந்து இதே மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த கடற்புலிகளின் விசைப் படகு அமைப்புடைய அலங்கரிக்கப்பட்ட அரங்கத்தில் வெற்றிவிழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது வடமராட்சிக் கோட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி மலையரசி ஈகைச் சுடரை ஏற்றிவைக்க வடமராட்சிக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. செல்வம் தலைமையில் இப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இப் பொதுக் கூட்டத்தில் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் செல்வி மாலினி, கடற்புலிகளின் மகளிர் தளபதி செல்வி நளாயினி, மன்னார் மாவட்டத் தளபதி திரு.

எமது மக்களின் வயல்களெல்லாம் மிதிவெடிகளை விதைக்கத் தொடங்கினர். அன்றிலிருந்து முகாம் தாக்குதல் நடைபெறும் முதல்நாள் வரை வேவுப் படையினர் கொடுக்கும் சிறுசிறு தகவல்களின்படி ஒட்டுமொத்தமாக எமது தலைவர் இராணுவ கூட்டுப்படைகளினதும் பாதுகாப்பு அமைச்சினதும், இராணுவத்தளபதிகளினதும், அதிகாரிகளினதும் பாதுகாப்புத் திட்டங்களை எல்லாம் உடைத்தெறிய ஒரு புதிய மாற்றுத்திட்டத்தை வகுத்தார். பயங்கரமான இராணுவக்காவலரண்களுக்குமுன்னால் காட்சிதரும் முட்கம்பி வேலியை சத்தமின்றி வெட்டுவதிலிருந்து மக்கள் பார்த்து வியக்கும் டாங்கியை இயக்குவது வரை எமது போராளிகள் பயிற்சி பெற்றனர். இரவு பகலென நினையாது செயற்பட்டனர். அதன் பலன்தான் இந்த வெற்றி.

மண்கிண்டி மலையிலும் யாழ்தேவி நடவடிக்கையிலும், பூநகரியிலும் கைப்பற்றிய ஆயுதங்களை வைத்துக் கொண்டு இனியும் வெற்றிப் பூரிப்பை அடைய முடியாது இவை எல்லாம் எம்மைப் பொறுத்தவரை எமது ஆயுதக்கிடங்கிலே உங்களுக்காக கையிருப்பில் காத்துக்கொண்டிருக்கின்றன. இதைப் பகிர்ந்து கொண்டு எங்களுக்கு முன் எமது மண்ணில் நிலைத்து நிற்க முயலும் எதிரிக்கு பதில் கூற எங்களுடன் எழுந்து வாருங்கள். எமது எல்லைகளை நோக்கி எதிரியை

கதிர், அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், கடற்புலிகளின் விசேட தளபதி திரு. சூசை ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்,

இப் பொதுக்கூட்டத்தின் முடிவில் வெற்றிச்சுடர் ஏற்றும் நிகழ்வு இடம்பெற்றது புலோலியில் இருந்து ஆரம்பித்த வெற்றிச்சுடர்ப்பேரணி மேற்படி மைதானத்தை நோக்கிப் புறப்பட்டது. இப் பேரணியில் சீருடைஅணிந்த இளைஞர்களும் யுவதிகளும் வெற்றிச்சுடர்களை ஏற்றியவாறு அணிவகுத்துச் சென்றனர். இவ் வெற்றிச்சுடர்ப் பேரணி மைதானத்தை அடைந்தது. இதைத்தொடர்ந்து மைதானத்தின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான வெற்றிச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டபோது அந்த மைதானத்தில் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் தமது வலக்கரங்களை உயர்த்தி 'வெற்றி' 'வெற்றி என விண்ணும் அதிரும் வண்ணம் முழக்கமிட்டு வெற்றிக் களிப்பை வெளிக்காட்டினர்.

இதைத் தொடர்ந்து பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

(க), (யோ), (ச), (நி)

நம்பிக்கையூட்டியது எமது தேசியத் தலைவர்தான் என்றும் தெரிவித்தார்.

பூநகரிக் கூட்டுத்தளம்மீது நடாத்தப்பட்ட தாக்குதல் ஒரு பெரிய கடற்போர் அல்ல. எதிர்காலத்தில்தான் சிறிலங்கா அரசுக்கெதிராக பெரும் கடற்போர்களை நடாத்தத் தொடங்குவோம். இவ்வாறான பெரும் சண்டைகளை நடாத்தப் போவது வேறுயாரும் இல்லை. உங்களது பிள்ளைகள் தான். இவர்களது தியாகத்தால் தான் பூநகரிக் கூட்டுத்தளம் தகர்த்தெறியப்பட்டது என்றும் தெரிவித்தார்.

விரட்டுவோம் எமது விடுதலைப் போராட்டத்தின் இந்த மூன்றாவது சகாப்தப் போராட்டத்திலே எமது தாயகத்தை முழுமையாக விடுவித்து புதிய நாட்டில் சுதந்திரமாய் சமதர்ம தமிழீழம், சமதர்ம தமிழீழம் என்று உரக்கக் கூவி பெருமை கொள்வோம் வாருங்கள் என்றார்.

''றுகுணு கப்பலில் வந்து சேர்ந்துள்ள விதை உருளைக் கிழங்கு விநியோகம் சம்பந்தமாகவும், விலை நிர்ணயம் செய்வது சம்பந்தமாகவும், ஒரு கூட்டம்இன்றுபி.ப. 2 00 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறும். இக் கூட்டத்திற்கு மாவட்ட விவசாய விலைநிர்ணய உப குழுவின் உறுப்பினர்களைச் சமுகமளிக்குமாறு மாவட்டப் பிரதி ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கிழக்கு

முகாம் எதுவும் இல்லை.

இதே வேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் மகிழவெட்டுவான் சிவத்தைப் பாலத்தில் அமைந்திருந்த இராணுவ முகாமையும் கடந்த மாதம் 24ஆம் திகதி மூடிவிட்டு படையினர் பின்வாங்கியுள்ளனர்.

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 13 - 12 - 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11692

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்

26-3412, 26-8138, 26-6983, 26-5576, 24-5679, 27 9404, 24-7672, 42-3615, 42-3368, 24-8603, 26-5202, 26-7272, 26-2414, 42-1754, 28-2829, 24-5721, 26-9658, 24-0576, 28-1636, 27-9090.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்

இல்லை.

# மரண அறிவித்தல்

## வீரகத்தி செல்வகுலசிங்கம் (சின்னத்தம்பி)

(காப்புறுதி அமைப்பாளர்)

கரவெட்டி. மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற வீரகத்தி தம்பதிகளின் மகன் செல்வகுலசிங்கம் 13-12-93 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் திலகவதியின் (ஞானாசாரியார் கல்லூரி ஆசிரியை) அன்புக் கணவரும், பிறைசூடி, இரத்தினசிங்கம், அருந்தவநாயகி, சகுந்தலாதேவி, இந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுகன்யா, சுனீத்தா, திருநீபன், சிறோமி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13-12-93 திங்கட்கிழமை நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்:

தகவல்:
வீ. பிறைசூடி
(சகோதரன்)

''ஹஸ்லொக் இல்லம்''
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(6882)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.